# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2018

## பத்தாம் வகுப்பு

பதிவு எண் :

நேரம்: 2.30 மணி

## சமூக அறிவியல்

மதிப்பெண்கள்: 100

பிரிவு - I (24 மதிப்பெண்கள்)

பகுதி - I

குறிப்பு : சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: 14 x 1 = 14

1. இரண்டாம் அபினி போரை முடிவுக்குக் கொண்டு வந்த உடன்படிக்கை
   a) பீகிங் b) நான்கிங் c) காண்டன் d) ஷாண்டுங்
2. கெய்சர் இரண்டாம் வில்லியம் ஒரு கப்பற்படையை நிறுத்தியிருந்த இடம்
   a) ஹெலிகோலாந்து b) ஹாலந்து c) ஜுட்லாந்து d) அயர்லாந்து
3. 'பிலிட்ஸ்கிரீக்' என்ற சொல் இதனுடன் தொடர்புடையது
   a) கொரில்லா போர் b) பதுங்கு குழி போர் c) நீர்மூழ்கி கப்பல் போர் d) மின்னல் போர்
4. 'மக்கள் பணியே கடவுள் பணி' என்ற கொள்கை கொண்டவர்
   a) அன்னிபெசன்ட் b) சுவாமி விவேகானந்தர் c) வள்ளலார் d) காந்தியடிகள்
5. இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர்
   a) டாக்டர் இராஜேந்திர பிரசாத் b) காந்திஜி c) டாக்டர். இராதாகிருஷ்ணன் d) சத்தியமூர்த்தி
6. இந்தியா அதிகப்படியான நம்பிக்கையை கொண்டிருப்பது a)போர் b) அமைதி c) அன்பு d) பகைமை
7. நுகர்வோரை ஏமாற்றுபவர்
   a) மரவேலை செய்பவர்கள் b) விவசாயிகள் c) தையல்காரர் d) வியாபாரிகள்
8. தவறான விடையைத் தேர்வு செய்க : பூர்வாச்சலில் அமைந்துள்ள மலைகள்
   a) பட்காய் குன்று b) நாகா குன்று c) மீசோ குன்று d) நீலகிரி குன்று
9. பொருந்தாத விடையைத் தேர்வு செய்க : இது ஒரு மழை மறைவுப் பகுதி.
   a) மும்பை b) பூனா c) ஷில்லாங் d) கொங்கணக் கடற்கரை
10. நெல் பயிரிடுவதற்கு ஏற்ற மண்
    a) கரிசல் மண் b) சரளை மண் c) வண்டல் மண் d) செம்மண்
11. வேகம் மற்றும் விலை உயர்ந்த நவீன போக்குவரத்து
    a) வான் வழி b) சாலை வழி c) நீர் வழி d) இரயில் வழி
12. நிகர நாட்டு உற்பத்தி
    a) மொத்த நாட்டு உற்பத்தி - தேய்மானம் b) நிகர உள்நாட்டு உற்பத்தி - தேய்மானம்
    c) தலா வருமானம் - தேய்மானம் d) மொத்த உள்நாட்டு உற்பத்தி - தேய்மானம்
13. இந்தியப் பொருளாதாரத்தில் முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டு a) 1981 b) 1991 c) 2001 d) 2010
14. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு நேரு ஏற்படுத்திய கொள்கை
    a) முதலாளித்துவ பொருளாதாரம் b) கலப்பு பொருளாதாரம்
    c) பொதுவுடைமை பொருளாதாரம் d) பணப் பொருளாதாரம்

பிரிவு - II

குறிப்பு : இரண்டு வினாக்களுக்கும் விடை தருக: 2 x 5 = 10

15. பொருத்துக:

i)

| | | |
|---|---|---|
| a) | ஜீன் மோனட் | - எப்.டி.ரூஸ்வெல்ட் |
| b) | அட்லாண்டிக் சாசனம் | - தலைவர் |
| c) | ஃப்யூரர் | - பிரெஞ்சு அரசியல்வாதி |
| d) | எல்லை காந்தி | - ஈ.வே.ராமசாமி பெரியார் |
| e) | வைக்கம் வீரர் | - கான் அப்துல் காபர் கான் |
| | | - டி.எம்.நாயர் |
| | | - சத்தியமூர்த்தி |

ii)

| | | |
|---|---|---|
| a) | சணல் தொழிலகங்கள் | - வெப்ப காற்று பலூன்கள் |
| b) | அலை சக்தி | - மேற்கு வங்காளம் |
| c) | உலக வெப்பமயமாதல் | - இங்கிலாந்து |
| d) | அமில மழை | - செயற்கைக்கோள் |
| e) | TIROS-I | - சல்பர்-டை-ஆக்ஸைடு |
| | | - விழிஞ்சம் |
| | | - பசுமை வீடு |

பிரிவு - II

குறிப்பு: i) ஏதேனும் பத்து வினாக்களுக்கு சிறு விடை தருக. 10 x 2 = 20

ii) பகுதி-Iல் நான்கு வினாக்கள், பகுதி-IIல் ஒரு வினா, பகுதி-IIIல் நான்கு வினாக்கள், பகுதி-IVல் ஒரு வினாவும் தேர்வு செய்க.

பகுதி - I

16. ஏகாதிபத்தியம் என்றால் என்ன?
17. சர்வதேச சங்கத்தின் அங்கங்கள் யாவை?
18. தேசிய தொழில் மீட்புச் சட்டம் - குறிப்பு வரைக.
19. அழித்து பின்வாங்கும் கொள்கை பற்றி குறிப்பு வரைக.
20. புரட்சி ஏன் இந்தியா முழுவதும் பரவவில்லை?
21. தியோசோபி என்பதன் பொருள் என்ன?
22. மவுண்ட் பேட்டன் திட்டம் என்றால் என்ன?
23. வீரத்தமிழன்னை என்று அழைக்கப்பட்டவர் யார்? ஏன்?

பகுதி - II

24. சார்க் நாடுகள் பரஸ்பர நல்லுறவை நிலைநாட்ட எந்தெந்த துறைகளில் செயல்பட்டு வருகின்றன?
25. மக்களாட்சி என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

பகுதி - III

26. இந்தியாவின் வடக்கு மலைகளிலுள்ள முக்கிய புனித தலங்களைக் குறிப்பிடுக.
27. மிக அதிக மழை பெறும் பகுதிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
28. செழுமையான மண்ணில் காணப்படும் மிக நுண்ணிய மற்றும் பெரிய சத்துப் பொருட்களை பட்டியலிடுக.

29. இந்திய வேளாண்மையிலுள்ள ஏதேனும் இரு சவால்களை எழுதுக.
30. வேளாண் சார்ந்த தொழிலகங்கள் என்றால் என்ன? உதாரணம் தருக.
31. ஒலி மாசுபடுதலை எவ்வாறு கட்டுப்படுத்துவாய்?
32. மக்கள் தொடர்பு சாதனங்களைக் கூறுக.
33. பேரிடர் அபாய நேர்வு குறைப்பின் முக்கிய அம்சங்கள் யாவை?

பகுதி - IV

34. தலா வருமானம் என்றால் என்ன?
35. பன்னாட்டு நிறுவனங்கள் - சிறுகுறிப்பு வரைக.

## பிரிவு - III (மதிப்பெண்கள் 8)

4 x 2 = 8

**குறிப்பு : ஏதேனும் நான்கினை வேறுபடுத்திக் காட்டுக:**

36. டெல்டா - கழிமுகம்.
37. காற்று மோதும் பக்கம் - காற்று மோதாப் பக்கம்.
38. வெப்பமண்டல பசுமை மாறாக்காடுகள் - வெப்பமண்டல பருவக்காற்று காடுகள்
39. உணவுப் பயிர்கள் - பணப்பயிர்கள்
40. காற்று மாசடைதல் - ஒலி மாசடைதல்
41. தேசிய நெடுஞ்சாலைகள் - மாநில நெடுஞ்சாலைகள்
42. தொலைபேசி - கைபேசி
43. வாகன தொழிலகம் - மென்பொருள் தொழிலகம்

## பிரிவு - IV (மதிப்பெண்கள் 8)

2 x 4 = 8

**குறிப்பு: கீழ்க்கண்ட தலைப்புகளில் ஏதேனும் இரண்டினைத் தேர்ந்தெடுத்து அவற்றின் அனைத்து வினாக்களுக்கும் விடையளி:**

44. முதல் உலகப்போர்:
    a) முதல் உலகப்போர் தொடங்கிய நாள் மற்றும் முடிவுற்ற நாளினைக் குறிப்பிடுக.
    b) மைய நாடுகள் மற்றும் நேச நாடுகள் - வேறுபடுத்துக.
    c) 1916 - ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜுட்லாண்டு போரில் போரிட்ட நாடுகள் யாவை?
    d) முதல் உலகப்போர் எவ்வாறு முடிவுக்கு கொண்டு வரப்பட்டது?
45. அடால்ஃப் ஹிட்லர்: a) அடால்ஃப் ஹிட்லர் எங்கு பிறந்தார்? b) ஹிட்லர் எதனைத் தோற்றுவித்தார்?
    c) ஹிட்லரின் ஆதரவாளர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
    d) ஹிட்லரின் இரகசிய காவல்படையின் பெயர் என்ன?
46. இராமலிங்க அடிகள்:
    a) இராமலிங்க அடிகளார் அனைவராலும் எவ்வாறு அழைக்கப்பட்டார்?
    b) ஜீவ காருண்யம் என்பதன் பொருள் யாது?
    c) இராமலிங்க அடிகளார் சத்திய தர்மசாலையை ஏன் நிறுவினார்?
    d) இவருடைய பக்திப் பாடல்களின் தொகுப்பு எவ்வாறு அழைக்கப்படுகிறது?
47. சி.இராஜகோபாலாச்சாரி:
    a) இராஜகோபாலாச்சாரி எங்கு எப்பொழுது பிறந்தார்?
    b) இராஜகோபாலாச்சாரி அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட கட்சி யாது?
    c) இராஜாஜி அவர்களால் எழுதப்பட்ட புத்தகங்களைக் குறிப்பிடுக.
    d) சாணக்கியர் என்று அழைக்கப்படுவது ஏன்?

## பிரிவு - V (மதிப்பெண்கள் 20)

4 x 5 = 20

**குறிப்பு: ஒவ்வொரு வினா எண்ணிலும் உள்ள மூன்று வினாக்களில் ஒன்றினைத் தேர்வு செய்து நான்கு வினாக்களுக்கு விடையளி:**

பகுதி - I

48. a) ஏகாதிபத்தியத்தின் விளைவுகள் யாவை? ***(அல்லது)***
    b) ஐ.நா.வின் முக்கிய சாதனைகள் யாவை? ***(அல்லது)***
    c) நீதி கட்சியின் தோற்றம் மற்றும் சாதனைகள் பற்றி ஒரு பத்தியில் விடையளிக்கவும்.

பகுதி - II

49. a) பஞ்சசீலம் மற்றும் அணி சேராக் கொள்கை பற்றி எழுதுக. ***(அல்லது)***
    b) தேசிய ஒருமைப்பாடு பற்றி எழுதுக ***(அல்லது)*** c) நுகர்வோர் உரிமைகள் பற்றி எழுதுக.

பகுதி - III

50. a) இமயமலைகளின் முக்கியத்தவத்தை விவரிக்கவும். ***(அல்லது)***
    b) நச்சுப்புகை என்றால் என்ன? அதன் விளைவுகள் யாவை? ***(அல்லது)***
    c) தொலை நுண்ணுணர்வு நுட்பத்தின் பகுதிகளை விவரிக்கவும்.

பகுதி - IV

51. a) பதினோறாவது ஐந்தாண்டு திட்டத்தின் நோக்கங்களை விவரிக்கவும். ***(அல்லது)***
    b) தமிழ்நாட்டின் மின்சக்தி திட்டங்களை விவரிக்கவும். ***(அல்லது)***
    c) நலம் நாடும் அரசின் பணிகளை விவரிக்கவும்.

**கண் பார்வையற்றோருக்கான பகுதி.**

## பிரிவு - VI (மதிப்பெண்கள் 5)

**குறிப்பு : கீழ்க்கண்டவற்றுக்கு காலக்கோடு வரைக.**

52. 1900 முதல் 1920 வரையிலான எவையேனும் ஐந்து இந்திய வரலாற்று நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.

## பிரிவு - VII (மதிப்பெண்கள் 15)

**குறிப்பு : வரைபட வினாக்கள்:**

53. a) ஆசிய வரைபடத்தில் கீழ்க்கண்டவற்றினைக் குறிக்கவும்.
    i) மங்கோலியா ii) பீகிங் iii) இந்தியா iv) துருக்கி v) ஜப்பான் ***(அல்லது)***
    b) இந்திய வரைபடத்தில் கீழ்க்கண்டவற்றினைக் குறிக்கவும்.
    i) பாண்டிச்சேரி ii) சௌரி சௌரா iii) அலகாபாத் iv) பாட்னா v) மீரட்
54. கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் ஏதேனும் பத்து இடங்கள் / பகுதிகளைக் குறிப்பிடுக:
    i) காரகோரம் மலைத்தொடர் ii) துர்காபூர் iii) அலகாபாத் iv) குருசிகார்
    v) மலபார் கடற்கரை vi) சில்கா ஏரி vii) பெங்களூரு viii) மன்னார் வளைகுடா
    ix) 300 செமீ.க்கு மேல் மழை பெறும் பகுதி ஒன்று. x) காவிரி ஆறு
    xi) காண்ட்லா xii) கட்ச் ரண xiii) கோதுமை விளையும் பகுதி ஒன்று
    xiv) இலட்சத்தீவுகள் xv) சென்னையிலிருந்து டெல்லி செல்லும் இரயில் பாதை

******